விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 363 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 02 சனிக்கிழமை (17.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## ஜனசக்தி நிறுவனத்தின் தலைவர் படுகொலை



(கொழும்பு)

ஜனசக்தி நிறுவனத்தின் தலைவர் தினேஸ் ஷாஃப்டர் கடத்தி சித்திர வதை செய்யப்பட்டு, வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

51 வயதான இவர் நேற்று முன்தினம் மாலை பொரளை 02

தமிழ் அரசுக் கட்சியின்

## 75வது ஆண்டு தொடக்கவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டு தொடக்க விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத் தில் இடம்பெறவுள் 11

## ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை நடத்துக

### காரைநகரில் நாளை போராட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம் பர திருவெம்பாவை உற்சவத் தினை வழமைபோல் சிறப் பாக நடத்தக் கோரி காரைநக ரில் நாளை ஞாயிற்றுக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

ஈழத்துச் சிதம்பரம் என வர் ணிக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் திருவெம்பாவை உற் சவத்தினை நடத்தாமல் ஆல யத்தினை பாலஸ்தாப னம் செய்வதற்கு 11

## வயிற்றோட்டத்தால் கிருமித் தொற்று

### நுணாவிலில் பிறந்து ஒரு மாதமான ஆண் குழந்தை மரணம்

(கரணவாய்)

வயிற்றோட்டத்தால் ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாக பிறந்து ஒரு மாதமேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த குகதர்சன் திசான் என்ற ஒரு 11

# தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை

### இந்திய ஊடகத்துக்கு பிரதமர் தினேஸ் குணவர்த்தன செவ்வி



(கொழும்பு)

**தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர சாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள தாக பிரதமர் தினேஸ் குணவர்த் தன தெரிவித்துள்ளார்.**

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி யில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியில், பெரும்பாலும் பொருளாதார நெருக் கடிகள் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும். இங்குள்ள சிறு பான்மை சமூகங்களில் 11

போதைக்கு அடிமையான

## 81 மாணவர்கள் புனர்வாழ்வுக்கு

(கொழும்பு)

ஐஸ் போதைக்கு அடிமையான 81 பாடசாலை மாணவர்கள் கடந்த மாதம் புனர்வாழ்விற்காக அனுப் பப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் போதைப்பொருள் 11

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள்

## பிரிக்க முடியாத இலங்கைக்குள் வாழும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துக

### எரிக் சொல்ஹெய்மிடம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுடன் பிரிக்க முடியாத இலங்கைக்குள் வாழும் சந் தர்ப்பத்தை ஏற்படுத்த வேண் டும் என் எரிக் சொல்ஹெய்மி டம் மனோ கணேசன் கோரி க்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் 11

## மன்னாரில் வயோதிப தம்பதிகளை தாக்கி

### பணம், நகை கொள்ளை

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிர தேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிபத் தம்பதியை தாக்கி 30 பவுண் தங்க நகைகள் மற் றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கொள்ளையிடப்பட் டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக் 11

இந்திய ரூபாயைப் பயன்படுத்தி

## வர்த்தகம் செய்வதற்கு இலங்கைக்கு அனுமதி

(கொழும்பு)

இந்திய ரூபாயைப் பயன் படுத்தி வர்த்தகம்செய்ய இலங் கைக்கு அந்நாட்டு மத்திய வங்கி ஒப்புதல் அளித்துள் ளது.

இந்திய ரூபாயில் பரிவர்த் தனைசெய்வதற்கு 'வொஸ்ட்ரோ' என்ற கணக்கை தொடங்க மத்திய வங்கி ஒப்புக்கொண்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுக்கு 11

சர்வதேசத்துக்கு காண்பிக்கவே

## இனப் பிரச்சினைக்கான தீர்வு என ரணில் நாடகம் போடுகிறார்

### பேராசிரியர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

சர்வதேசத்துக்கு காண் பிக்கவே இனப் பிரச்சினைக் கான தீர்வு என ரணில் நாடகம் போடுகின்றார் என பேராசிரி யர் திஸ்ஸ விதாரண தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 75ஆவது சுதந்திர தினத் திற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவிலில் 1.5 பரப்பு காணி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.

(13797)

**074 134 5805**


## இனப் பிரச்சினை...

தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சுதந்திர தினத்திற்கு இன்னும் 51 நாட்களே உள்ளன. அரசியல் தீர்வு வழங்க நான் தயாராக இருந்தேன்.

ஆனால் அதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் இடமளிக்கவில்லை என சர்வதேசத்திற்கு காண்பிக்கும் முயற்சியை ஜனாதிபதி தற்போது கையாளுகிறார் என்று பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

பாராளுமன்றத்திலும் பொது இடங்களிலும் சமஸ்டி அடிப்படையிலான தீர்வு தொடர்பில் கருத்துரைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் சமஸ்டி தொடர்பில் கருத்துரைக்கவில்லை.

காணிப் பிரச்சினைக்கு தீர்வு, பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக்கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்திற்கு தீர்வு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச நிர்வாக கட்டமைப்பில்தமிழ்மொழிபேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கல், முறையான அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்கள் இதன்போது முன்வைக்கப்பட்டன என்றார். (ம-7)

## ஜனசக்தி...

மயானத்தில் தனது காருக்குள் ஜிப் கட்டுகளால் (zip ties) பிணைக்கப்பட்டு பலத்த காயமடைந்த நிலையில் காணப்பட்டார்.

தனக்கு பாரிய தொகை பாக்கி வைத்துள்ள நபரை சந்திப்பதாக தனது மனைவிக்கு தெரிவித்துவிட்டு கொழும்பு 7 இல் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நபருக்கும் தினேஷ் ஷாப்டருக்கும் இடையில் 138 கோடி ரூபாய் பரிமாற்றம் நடந்துள்ளதாகவும், இந்த கொலையின் முக்கிய சந்தேகநபராக பொலிஸாரால் தேடப்படும் நபர், அந்த தொகையை செலுத்தாத காரணத்தால் முன்னதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் வீட்டிலிருந்து புறப்பட்ட ஷாஃப்டரின் தொலைபேசிக்கு மனைவி தொடர்பு கொள்ள முடியாமல் போனதையடுத்து, ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம், அவர் பொரளை மயானத்தில் இருப்பதை கண்டறிந்தார். உடனடியாக ஜனசக்தி நிறுவன நிர்வாக அதிகாரியொருவருக்கு தகவல் வழங்கினார்.

அந்த நிர்வாக அதிகாரி பொரளை மயானத்திற்கு சென்றார். அங்கு ஷாஃப்டர் கை மற்றும் கழுத்து கட்டப்பட்ட நிலையில் அவர் கண்டுபிடிக்கப்பட்டதாக விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

மயான ஊழியர் ஒருவரின் உதவியுடன் ஷாஃப்டரின் கட்டுக்களை அவிழ்த்து, கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதித்துள்ளார், அங்கு அவர் உயிரிழந்தார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கணனி திருட்டு இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் மாதகல் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மடிக்கணனி களவாடப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த களவுச் சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

அந்தவகையில் பொலிஸார், நேற்று முன்தினம் மாதகல் தாயபுரம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவரை மடிக்கணனியுடன் கைது செய்தனர். (ம-7,104)


வாருங்கள்... இலவசம்...

## வருடாந்த ஒளி விழா

**நாற்சதுர சுவிசேஷ சபை, முத்திரைச் சந்தி, நல்லூர்.**

**17.12.2022 (சனிக்கிழமை இன்று)**

**4.00 p.m**

கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள், பரம்பரை சாபங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற உங்களுக்காக இறுதியில் ஜெபிக்கப்படும்.

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
673, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**021 222 6730**

(13800)


## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் திலகேஸ்வரன்
### (தீபன் – மணியம்)

பாரதி வீதி, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திலகேஸ்வரன் 15.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வரும் மின்னொளிவதனா(ஓய்வுபெற்ற ஆசிரியை), வதனேஸ்வரி(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்), பவனேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புச் சகோதரரும் இரத்தினகுமார், தருமராஜா, முருகானந்தம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஜராசந்தன், ஜதுநந்தா, அபிராம், ஸ்ரீராம் ஆகியோரின் மாமனாரும் ஜனனியின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.12.2022 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5534)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 17.12.2022 சனிக்கிழமை தொடக்கம் 23.12.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி R.விமலா அவர்கள் (இந்தியா) மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன், துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-5531)

தொடர்புகளுக்கு:-

**யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**

இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல:- 021 222 2772, 076 857 1395,
077 123 5646, 071 440 3268, 077 736 8745


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலுள்ள முன்னாள் போராளிகள் 31 பேரையும் விடுவிக்க வேண்டும்

## சம்பிக்க ரணவக்க வலியுறுத்து



(கொழும்பு)

தற்போது சிறைச்சாலையில் உள்ள முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் என 43 ஆவது படையணியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி தலைவர்களுடனான மாநாடு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களாகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பின்னர் அந்த இயக்கத்துக்கு தலைமை ஏற்றிருந்த குமரன் பத்மநாதன் வெளியில் இருக்கிறார்.

ராமன், நகுல், கருணா போன்றவர்களும் வெளியில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் சிறைச்சாலையில் உள்ள 31 முன்னாள் போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (நி)

# வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நான்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

வட, கிழக்கு மாகாணம் உள்ளிட்ட கொழும்பு, ஊவா ஆகிய நான்கு மாகாணங்களில் தொடர்ந்து வீதி அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முடியவில்லை.

இவ் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சில வீதிகளை போக்குவரத்து மேற்கொள்வதற்கு ஏற்றது போல அபிவிருத்திக்கு மேற்கொள்வதாகவும் ஐரோட் திட்டப்பணிகள் சிலவற்றை முடிவிற்கு கொண்டு வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. ஆசிய அபிவிருத்தியின் கடன் நிதியானது சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்தும் உடன்பாடு உறுதியாக கிடைக்கும் வரை அந்நிதி மூலம் நடைபெற்ற ஐரோட் திட்ட வீதி புனரமைப்புப் பணிகள் சிலவற்றை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சில வீதிகள் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் மாத்திரம் சீரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

இத் திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இடம் பெறவுள்ள உடன்படிக்கை பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி மீள வழங்க உடன்பாடு காலத்தை பொறுத்துத் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது. (நி)

# முதலாம் தவணைக்கு முன் பாடநூல், சீருடை வழங்கப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு பாடநூல் மற்றும் சீருடை விநியோகிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக கட்டமைப்பு தற்போது மிக மோசமாக உள்ளது. மாணவர்கள் ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும். எதிர்வரும் நாட்களில் பல்கலைக்கழக சட்டம் திருத்தம் செய்யப்படும்.

கடுமையான தீர்மானத்தை செயற்படுத்தாவிட்டால் இலவச கல்வி மலினப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# விருந்துபசாரங்களில் பானங்களுடன் கலக்கப்படும் ‘ஐஸ்’ போதைப்பொருள்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கும் பொலிஸார்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் பல்வேறு விருந்துகள் நடத்தி ஐஸ் போதைப்பொருளை பல்வேறு தரப்பினருக்கு அறிமுகப்படுத்தும் இரகசியத் திட்டம் ஒன்றை கடத்தல்காரர்கள் மிகவும் திட்டமிட்டு முன்னெடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ நேற்று முன்தினம் ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இந்த இரகசிய வேலைத்திட்டத்தின் முதல் இலக்கு பாடசாலை மாணவர்கள் என தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விருந்தில் புதிய உணவு, பானங்களை பருகி பார்க்குமாறு புதிதாக வருபவர்களிடம் ஐஸ் போதை பொருளுக்கு அடிமையானவர்கள் இதனை அறிமுகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிடைத்த தகவலுக்கமைய, வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு சிறுவர்களை அழைத்து வரும்போது மிகவும் கவனமாக இருக்குமாறும் பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி)


சிவ சிவ

தென்னாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சைவசித்தாந்தத்துறையும்
தென்னாடு செந்தமிழாகம சிவமட சைவ மாணவர் சபையும்
இணைந்து நடாத்தும்

மார்கழிப் பெருவிழா - 2022

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமனிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

**மார்கழித் திங்கள் 10ஆம் நாள் (டிசம்பர் 25) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரமேசுவரர் திருக்கோயில் வழி பாட்டுடனும் தேவாரத் திருமுறை, நால்வர் எழுந்தருளலுடன் அரங்கங்கள் ஆரம்பமாகும்.

**காலை அரங்கம் - தில்லைக்கூத்தன் திருவம்பலம்**
(காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை)

- திருவிளக்கேற்றலும் அம்பலவாணர் அருள்வழிபாடும்
- அருள் உரை - தவத்திரு. **மீனாட்சி சுந்தரம் தம்பிரான் சுவாமிகள்** (தருமை ஆதீன திருச்சி மௌன மட மற்றும் இலங்கை திருக்கேதீச்சர மட தம்பிரான் சுவாமிகள்)
- தொடக்கவுரை - கலாநிதி **பொன்னுத்துரை சந்திரசேகரம்** (தலைவர் - சைவ சித்தாந்தத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- வாழ்த்துரை - பேராசிரியர். **சி.சிறிசற்குணராசா** (துணைவேந்தர்-யாழ். பல்கலைக்கழகம்)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **“அண்ணலார் உளர் அஞ்சுவது என்னுக்கே”** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே. பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- கௌரவிப்பு நிகழ்வு - கொடையாளர்களை சிறப்புச் செய்யும் நிகழ்வு **அடியார் தமக்கு அமுது செய்விக்கும் நிகழ்வு - 12.30 முதல் 1.00 மணி வரை**

**மாலை அரங்கம் - திருவாதவூரடிகள் திருவம்பலம்**
**(1.30 மணி முதல் 5.30 மணி வரை)**

- அருள் உரை - தவத்திரு. **அகத்தியர் அடிகளார்** (தென் கயிலை ஆதீன குருமுதல்வர்)
- தொடக்க உரை - சிவத்திரு. **செந்தமிழாதன்** (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)
- வாழ்த்துரை - சிவத்திரு. **நல்லையா விஜயசுந்தரம்** (தலைமை ஆசிரியர் - வலம்புரி பத்திரிகை)
- திருமுறை விண்ணப்பம் - குமாரவயலூர் திருமுறைக்கலாநிதி. முனைவர். **திருஞான பாலச்சந்திரன் ஓதுவார்** (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
- சிறப்புரை - தலைப்பு - **“எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்”** வழங்குபவர் - தருமை ஆதீனப்புலவர், திருமுறைக்களஞ்சியம், சிவத்திரு. **எம்.கே.பிரபாகரமூர்த்தி** அவர்கள்
- திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரிசில் வழங்கல்
- நன்றியுரை - சிவத்திரு. **வனராஜ் சசிராஜ்** (பொதுச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

நிகழ்ச்சி முன்வைப்பு - சிவத்திரு. **செந்தமிழாதன்** மற்றும் சிவத்திரு. **பாலுசாமி சிவமாதவன்** (ஆசிரியர்கள் - தென்னாடு திங்கள் இதழ்)

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்”
திருச்சிற்றம்பலம்

**தென்னாடு செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம். 021 221 2739 / 070 770 1111**

(L-5529)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அமரர் வேலுப்பிள்ளை பரமானந்தம்

(ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர் - பருத்தித்துறை பல.நோ.கூ.சங்கம்)

மலர்வு 16 • 09 • 1951



உதிர்வு 15 • 12 • 2022

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும், அரசடி தொண்டைமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பரமானந்தம் அவர்கள் (15.12.2022) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தங்கம் தம்பதியினரின் மருமகனும் அருந்தவமலரின் ஆருயிர்க் கணவனும், தர்ஜிகா (முன்னாள் பதிப்பாசிரியர் - சட்ட வரைஞர் திணைக்களம்), சுரேகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், புத்தூர் பிரதேசசபை), சுமதா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பருத்தித்துறை நகரசபை), வினோதா (இலங்கை மத்திய வங்கி), நிரோஷ்குமார் (கொமர்ஷியல் வங்கி - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஞ்சித் (தொழினுட்ப உதவியாளர் - புகையிரதத் திணைக்களம்) லோகதர்சன் (உரிமையாளர் - சின்னராசா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் மாமனாரும், தவமணிதேவி, அமரர் தில்லையம்பலம், ரஞ்சினிதேவி, சிவானந்தம், சறோஜினிதேவி, சச்சிதானந்தம் (உரிமையாளர் - K.V.S ஹாட்வெயார்), செல்வானந்தம் (கொழும்பு), சதானந்தம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், புஸ்பகாந்தன் (கனடா), விஜயமலர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஸ்மிதா, நயனிகா, பர்விதா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.12.2022) நாளை காலை 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகக் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டபக்காடு, கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

தகவல் : குடும்பத்தினர்
076 755 1600 | 076 912 3152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் மாநாடு

## நான்காம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நாவலர் மாநாட்டில் 4 ஆம் நாளான இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ்.பல்கலை முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இதில் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன், சிரேஷ்ட விரிவுரையாளர் கு.பாலசண்முகன், சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன், விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 5 மணிக்கு ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் பொது அரங்கு நிகழ்வு திருக்கேதீஸ்வரம்தருமபுர ஆதீன கிளைமட ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் மகாராஜாதி து.ஷ.ரத்தினசபாபதிக் குருக்கள் முன்னிலையில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தலைமையில் ஆரம்பமாகும்.


இதில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா, தமிழ்நாடு சிதம்பரம் ஆறுமுக நாவலர் சைவ வித்தியாசாலை அறக்கட்டளை தலைவர் கலாநிதி சு.அருள்மொழிச் செல்வன், அகில இலங்கை சைவப் பேரவை பிரதித் தலைவர் நா.வேதநாயகம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மங்கல விளங்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி பேராசிரியர் ஏ.என்.கிருஷ்ணவேணியால் நூல் வெளியீடு, வெளியீட்டுரை என்பன நிகழ்த்தப்படும். தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்று நாவலர் கீர்த்தனை எனும் தலைப்பில் இசையரங்கம் நடைபெறும். இறுதியாக



நாட்டிய நாடகம் நிகழ்வுடன் பொது அரங்கு நிறைவு பெறும். (4)

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் நினைவுகள்...



யாழ்ப்பாணத்து நல்லூரில் நாவலர் வளர்ந்த வீடு. நாவலர் வீதியிலுள்ள இந்த வீட்டிலே தான் நாவலர், 1846 ஆம் ஆண்டு முதல் பல மாணாக்கர்களை ஒன்றுசேர்த்து இராத்திரியிலும் காலையிலும் வேதனம் பெறாது சைவ ஆசிரியர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் பயிற்சி அளித்து வந்தார்.



வண்ணார்பண்ணையில் நாவலரின் வித்தியாநுபாலன அச்சியந்திர சாலை இருந்த இடம். இன்றும் அன்னாரது நினைவுச் சின்னமாக விளங்குகிறது.



சைவ உலகின் தலைமைப்பீடம் போன்ற திருவாவடுதுறை ஆதீனம். இங்குதான், 1849 ஆம் ஆண்டு, ஆறுமுக நாவலருக்கு அருங்கலை வினோதரான சின்னச் சந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர், "நாவலர்" என்ற பட்டம் சூட்டிக் கௌரவித்தார்.



வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயில் கோபுரத்தோடு கூடிய இந்தக் கோயிலில் தான், 1847 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி சைவம் என்னும் செஞ்சாலி வளரும் பொருட்டு, பிரசங்கம் என்னும் மழையை முதல் முதலில் பொழிந்தார்.



இன்று சிதம்பரத்திலே காணப்படும் ஆறுமுகநாவலரின் உயர்நிலைப்பள்ளியின் நுழைவாயில். 1864 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28 ஆம் திகதி இந்த வித்தியாசாலையை நாவலர் நிறுவினார்.



வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையைக் கொண்டு நடத்துவதற்கென, நன்னித்தம்பி முதலியார் உபகாரம் செய்த 400 ரூபாவை மூலதனமாகக்கொண்டு, யாழ்ப்பாணம் மிட்டாய்க் கடைச் சந்தியில் நாவலர் வாங்கிய வர்த்தகசாலையும் ஏனைய கடைகளும்.

# இராசிபலன்

17.12.2022
மார்கழி 02 , சனிக்கிழமை
நவமி முன்னிரவு 11.37 மணிவரை

அத்தம் முழுவதும்
சுபநேரம் -3.22-4.52 மணிவரை
இராகுகாலம்- 9.22-10.52 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரட்டாதி

**வளவன்**



**மேஷம்**

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், காரிய அனுகூலமுண்டு.



**ரிஷபம்**

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நாள்.



**மிதுனம்**

பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.



**கடகம்**

பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள்.




**சிம்மம்**

ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.



**கன்னி**

குடும்பத்தினருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**துலாம்**

மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், குடும்பத்தினரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்,




**விருச்சிகம்**

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரியங்கள் எளிதில் கைகூடும்.



**தனுசு**

செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், எதிர்கால நலனில் அக்கறை கூடும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.



**மகரம்**

புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**கும்பம்**

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.



**மீனம்**

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும் பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையுணர்வு உள்ளவன் நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டான்.

# யா/இளவாலை மெய்கண்டா
# நூற்றாண்டு விழா சிற



### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகளின் ஆசிச் செய்தி

கல்வி சார் பெருந்தகைகளுக்கு!

யாழ்.குடா நாட்டிலே கல்விக்குப் பெயர்போன இளவாலை மண்ணில் அமைந்து கல்விச் சேவையை வழங்கும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். நீண்டகாலமாக கல்வியிலும் இதர செயற்பாடுகளிலும் நல் மாணவர்களை உருவாக்கும் இப்பாடசாலையானது அனைவர் மனதையும் வளப்படுத்தி எல்லோரையும் கல்வியியலாளர் ஆக்கி நல்ல சிந்தனையோடும் இறை நம்பிக்கையோடும் நூற்றாண்டுகள் கடந்து பயணிக்கின்றது.

"வாழக்கல்மின்" என்ற மகுடவாசகத்தினூடாக மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டுகிறோம். மேலும் இப்பாடசாலை பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் என இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களையும் வாழ்த்துகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்**



### சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்களின் ஆசிச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இளவாலைக் கிராமத்தின் கலங்கரை விளக்காகத் திகழ்கின்ற யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆனது தனது நூற்றாண்டு விழாவினையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலையானது அமரர்.வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் கொடையின் சின்னமாகும். இக் கிராமத்து மாணவர்களின் அறிவுப்பசிக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் எனக் கூறினால் மிகையாகாது. அன்றிலிருந்து இன்றுவரை கல்வி, கலை, விளையாட்டு என சகல துறைகளிலும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக் கொணர்ந்து வருகிறார்கள்.

இப்பாடசாலையின் புகழ் மென்மேலும் பல வளர்ச்சிப்படிகளை எட்டிக்கொள்ள வேண்டுமென வாழ்த்துவதுடன், மேலும் நூற்றாண்டு விழா மலரானது மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் பயன்பெறவும் இம் மலரினை வெளியிடும் மலர்க்குழு, அதிபர், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல இளவாலை ஆனைவிழுந்தான் விக்ன விநாயகப் பெருமானின் அருளாசி கிடைக்கப் பெறவும் இம்மலர் இனிதே சிறக்கவும் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"சிவகாம கிரியா தத்வ நிதி"**
**சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்கள்**
**(ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் ஆலயம்)**



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியா லய நூற்றாண்டு விழாவில் மலரும் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

இளவாலையில் 1922 இல் அம்பலவர் வளவில் உதயமாகிய ஏழூர் இராசரத்தினம் அவர்களின் காணியில் நிரந்தர கட்டடத்தில் நிலை பெற்றதாகவும் 1935 இல் கனிஸ்ட இடைநிலைப் பாடசாலையாக தரமுயரப்பெற்று 1939 இல் சிரேஷ்ட பாடசாலையாக உருவாகியமையும் 1973 இல் அப்பிரதேசத்தில் ஆரம்பக்கல்வி முன்னோடிப் பாடசாலையாகவும் விளங்கிய சிறப்பைப் பெறுகின்றது. 1980களில் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு சிறப்புடன் விளங்கிவரும் இவ் மகா வித்தியாலயத்தின் மகுட வாசகம் "வாழக் கல்மின்" என்பதற்கு ஏற்றால் போல் மாணவர்களின் அடைவு மட்டம் சிறப்புடன் விளங்குவதனையும் நோக்க முடிகிறது.

"எண் என்ப ஏனை எழுத்து என்ப
இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு"

என்னும் வள்ளுவரின் வாக்குக்கு அமைய எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டும் இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு கண் போன்றது. இதனையே சிரமேற்கொண்டு இம் மகா வித்தியாலயம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைப்பாடவிதானங்களிலும் சிறப்பிடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் கரப்பந்தாட்ட அணி மாகாண மட்டத்தில் சம்பியன் பட்டத்தை இவ்வருடம் பெற்றுக் கொண்டமையும் கராத்தே அணி மாகாண மட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டமையும் கடந்த பல ஆண்டுகளாக சிறப்பான அடைவை எட்டி பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதும் இம்மகா வித்தியாலயத்தின் சிறப்பையே எடுத்துக் காட்டுகின்றது.

யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் பெயருக்கு ஏற்றால் போல் தனது பணியைச் செவ்வனே ஆற்றிவர உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள் அனைவரையும் பாராட்டி நூற்றாண்டு விழாக் காணும் இவ்வேளையில் இம்மகா வித்தியாலயத்தை சிறப்புடன் பேணிவரும் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், நூற்றாண்டு விழா மலர்க் குழுவினர் என அனைவரையும் பாராட்டி நூற்றாண்டு மலர் சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**க.மகேசன்**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



### வட மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் அதன் நூற்றாண்டை கொண்டாடும் இத் தருணத்தில், அதன் வளர்ச்சிப் பாதையின் ஒரு கண்ணோட்டம் அவசியமானதாகும்.

1922 இல் இளவாலையம்பதி எனும் அம்பலர் வளவில் உதயமாகி 1930 இல் நிரந்தர கட்டடத்தைப் பெற்று 1935 இல் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு 1939 இல் சிரேஷ்ட பாடசாலையாக உயர்த்தப்பட்டது பெருமைக்குரியது. அதன் வளர்ச்சிப் பாதையில் வந்த இடர்கள் அனைத்தையும் சவால்களாக ஏற்று அதன் நூற்றாண்டை நோக்கிய வெற்றி நடைக்கு பங்கேற்ற அனைவரும் சாதனையாளர்களாக காணப்படுகின்றார்கள்.


பாடசாலையின்வளர்ச்சியில் முக்கிய பங்கேற்பது அனைத்து பழைய மாணவர்களினதும் கடமையாகும். தாங்கள் கல்வி கற்ற பாடசாலையினை மறவாது தங்களாலான சிறிய உதவியையேனும் செய்து, எதிர்கால சந்ததியினருக்கு கல்விக்கான நல்ல சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்து, திறமையான மாணவர்களை உருவாக்குவதற்கு அயராது உழைத்த அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

இன்று எமது இளவயதினரின் மனதில் சமய உணர்வுகளை வித்திட்டு, அவர்கள் தவறான பாதையில் செல்லாது ஒழுக்கமுடைய பிரஜைகளாக வளர்ப்பது அனைத்து ஆசிரியர்களினதும் பெற்றோரினதும் கடமையாகும்.

கல்வி எனும் வித்து அழிக்க முடியாத சொத்து, அள்ள முடியாத முத்து, கண் போன்ற கல்வியை நீ பொன் போல பாதுகாத்தால் மண்ணுலகில் சான்றோனாய் வாழ்ந்து விண்ணை தொடலாம். அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரமே கல்வி. அறியாமையை அகற்றி அறிவை காட்டும் அற்புத விளக்கு தான் கல்வி. அறிவு எனும் பெட்டகத்தை திறக்க உதவும் ஒரே சாவி கல்வியே. ஒவ்வொரு சிறுவரினதும் இலட்சியத்தின் நுழைவாயில் பாடசாலையாகும்.

அவ்வாறான பாடசாலைகளில் ஒன்று இன்று நூற்றாண்டை கொண்டாடுகின்றது. அதன் வளர்ச்சிக்கு உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுகளை மீண்டும் கூறுவதுடன், இப்பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து திறமையான மாணவர்களை உருவாக்கி சமுதாயத்திற்கும் தாய் நாட்டிற்கும் பெருமை சேர்க்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**ஜீவன் தியாகராஜா, ஆளுநர், வட மாகாணம்**



### வாழ்த்துச் செய்தி

யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இளவாலையம்பதி எனும் அம்பலவர் வளவில் 1922 ஆம் ஆண்டு இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தற்காலிக இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையானது 1930 ஆம் ஆண்டுகளில் நிரந்தரக் கட்டடத்தில் நிலைபெற்று தனது கல்விப்பணியினை தொடர்ந்தது. 1935 ஆம் ஆண்டில் கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாக தரமுயர்வு பெற்றிருந்த பாடசாலையானது கல்விப் பணியில் அடைந்த குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினால் 1939 ஆம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்வு பெற்றது. இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் சென்ற பாடசாலையில் 1980 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு கலைப்பிரிவிற்கான பாடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று சாதித்துள்ளமை கல்விப் பணியின் வளர்ச்சிக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். பாடசாலையின் வளர்ச்சியின் பின்னணியில் "ஏழூர் அரங்கு" என்ற திறந்தவெளி அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது.

இத்தகைய வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த பாடசாலையானது 1992 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகளினால் யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, யா/உசன் இராமநாதன் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் தற்காலிக பாடசாலையாக இயங்கி வந்திருந்தது. அதன் பின்னர் 1997 ஆம் ஆண்டுகளில் மீண்டும் இளவாலையிலே இயங்கத் தொடங்கி புதுமெருகு பெற்றது. இதன் பின்னர் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இப் பாடசாலை மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி புத்தாக்கப் போட்டி, விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிலும் மிளிர்கின்றமை மாணவர்கள் பல்துறைசார் திறமைகளுடன் பயின்று வருகின்றமையும் புலனாகின்றது.

100 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை ஒழுங்கமைப்பு செய்யும் விழா குழுவினர் மற்றும் மலர் வெளியீட்டு பணியினை ஆற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுவதுடன் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவும் இறையாசியை வேண்டி பாராட்டி மனதார வாழ்த்துக்களையும் தெரி வித்துக் கொள்கின்றேன்.

**இ.வரதீஸ்வரன், செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வட மாகாணம்.**




இப் பாடசாலை 1922 ஆம்
இராசரத்தினம் அவர்களால் அவ்
வடக்கில் வாழ்ந்த நன்மனம் படைத்த
கொண்டு நிறுவபட்டது. அந்நிய ஆட்
பணவசதி படைத்தவர்கள் மட்டுமே
கிறிஸ்தவ மதத்தை தழுவ விரும்
கிடைத்தது.

ஏழை மக்கள் குறிப்பாக சைவ சமய
வாய்ப்பின்றி அலைவதை 24 வய
உள்ளம் பொறுக்கவில்லை. " எல்லே
தத்துவத்தின் படி இப் பாடசாலை உரு

தனது சொந்தக்காணி 28 பரப்பை
தோடு மட்டுமன்றி நிரந்தர கட்டடம் அ
ஓடு போடுவதற்கு நிதி தேவைப்பட்ட
மாங்கல்யத்தையே நல்கினார் என்
நிகரேது.தான் ஆசிரியராக இருந்து
யாளராகவும் பணியாற்றினார்.

ஏழூர் இராசரத்தினம் அவர்களு
கிருபாசக்தி அவர்கள் பாடசாலை அபி
செயற்பட்டு வளர்த்தெடுத்தார்.

மேலும் இப் பாடசாலை பல்வேறு
அதில் 1935 ஆம் ஆண்டு கனிஷ்ட இ
தரமுயர்வு பெற்றது. 1955 கலாசாலை
இல் பாடசாலையின் மகுட வாசகமாக
செய்தது. 1978 ஆம் ஆண்டு பொ
வெளியீடும் இடம் பெற்றது. 1980



### வலயக்கல்விப் பணிப்

எல்லோர் உள்ளா
நீங்கி மெஞ்ஞான ஒ
தீபத் திருநாளில் யா/
மகா வித்தியாலயத்தின்
நிறுவுநர் நினைவு
விழாவையும் வெகு சிறப்பாக முன்னெ
மகிழ்வடைகின்றேன்.

அகத்திலே மெய்யொளி வீசிய வள்
அவர்களின் மேலான சிந்தனையில் இ
மளித்து அவரது இலட்சியப் பாதையை நோ
பாடசாலை பல சாதனைகளை நிலை
அறிந்ததே.

பாடசாலையின் கடந்த கால வரலா
முறையினர் மட்டுமல்லாது எதிர்கால சந்
வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு
அதிபர், இணைப்பு அதிபர் மற்றும் ஆசி
நூற்றாண்டு விழாவில் வெளிவரும் "மெய்
மலர் எங்கும் பிரகாசித்து மலர எனது ம
தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பெ.ரவிச்சந்திரன் வலயக்கல்விப் பணி**
**அலுவலகம், வலிகாமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டான் மகா வித்தியாலயத்தின்
# றப்பிதழ்- (1922 -2022 )



ஆம் ஆண்டு வள்ளல் ஏழூர்
ல் அவ்வேளையில் இளவாலை
டைத்த பல பெரியோர்களின் துணை
ய ஆட்சி காலமாகிய அந்நாளில்
மட்டுமே கல்வி பெற முடிந்தது.
விரும்பியோர்க்கு கல்வி வசதி

வ சமய ஏழைப் பிள்ளைகள் கல்வி
வயது இளைஞனான ஏழூரின்
எல்லோருக்கும் கல்வி " என்ற
லை உருவாக்கப்பட்டது.
பரப்பையும் பாடசாலைக்கு நல்கிய
டம் அமைக்கப்பட்ட போது அதற்கு
ப்பட்ட போது தன் மனையாளின்
ர் என்பது வள்ளல் தன்மைக்கு
இருந்து கற்பித்ததோடு முகாமை

வர்களுக்குப்பின் அவரது மகள்
ல அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன்

வேறு வளர்ச்சிப்போக்கு கண்டது.
ஷ்ட இடை நிலைப் பாடசாலையாக
ாசாலை மண்டபம் அமைப்பு 1976
சகமாக "வாழக் கல்மின்" தெரிவு
டு பொன்விழாவும் பொன்மலர்
1980 ஆம் ஆண்டு மாசிமாதம்

முதலாம் திகதி மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு ஞானாமிர்த மண்டபம் அமைக்கப்பட்டது.

இவ்வாறாக பாடசாலை பல்துறைகளின் மண்டப அமைப்பு ஏழூரார் சிலை அமைப்பு, பாண்ட் வாத்தியம், கணிணி அறை, நூலக அறை, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான மண்டபம், சுகாதார மேம்பாட்டு அறை போன்ற கட்டடம் அமைக்கப்பட்டு பாடசாலை அழகு மிக்கதாக காட்சியளிக்கின்றது.

இன்று இப் பாடசாலை நூற்றாண்டில் கால்பதிக்கின்ற வேளையில் இதற்கு முன் உள்ள 15 அதிபர்கள் உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் அனைவரதும் அர்ப்பணிப்புடன் பாடசாலை அதிபரான திரு.இ. கணேசானந்தன் அவர்கள் திறம்பட கட்டிக் காக்கும் தன்மை மிகச் சிறப்பானது. ஏழூரானின் கனவு இன்று இப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், புலம் பெயர் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்,அனைவரும் ஒன்றிணைந்து இப் பாடசாலையின் மேன்மைக்கு உறுதுணை அளிப்பது பாராட்டுக்குரியது.

இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று நல்வழி காட்டிய அனைத்து உள்ளங்களுக்கும் நூற்றாண்டில் கால்பதிக்கும் வேளையில் இந்தப் பாடசாலையில் இதற்கு முன் பணியாற்றிய 15 அதிபர்கள்,உப அதிபர்கள் , ஆசிரியர்கள் , கல்வி சாரா உத்தியோகத்தர்களின் பணிகளும் இதற்குப் பின் பணியாற்றுகின்ற அர்ப்பணிப்பு மிக்க இணைப்பு அதிபர், உப அதிபர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்களின் அர்ப்பணிப்பான பாடசாலையுடனான ஒத்துழைப்பும் பாடசாலையை இன்றைய உயர் நிலைக்கு இட்டுச் சென்றது என்பது வெளிப்படை உண்மையாகும்.

### பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி


உள்ளங்களிலும் அஞ்ஞான இருள்
ான ஒளி பிரகாசிக்கும் கார்த்திகைத்
ல் யா/இளவாலை மெய்கண்டான்
யத்தின் நூற்றாண்டு நிறைவு நாளில்
னைவு தினத்தையும் பரிசளிப்பு
ன்னெடுத்துச் செல்வதையிட்டு பெரு

ய வள்ளல் ஏழூர் இராசரத்தினம்
யில் இன்று கம்பீரமாகத் தோற்ற
யை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும்
நிலைநாட்டி வருவது யாவரும்

வரலாறுகளை இன்றைய தலை
ால சந்ததியினரும் அறிந்து கொள்ள
னயோடு பாடசாலையின் அதிபர், உப
ம் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன்
ம் "மெய்யொளி " நூற்றாண்டு விழா
னது மனமார்ந்த வாழ்த்துக்களைத்

ிப் பணிப்பாளர், வலயக்கல்வி


### அதிபரின் வாழ்த்துச் செய்தி



வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் தூய சிந்தனையில் வந்துதித்த யா/ இளவாலை மெய் கண்டான் மகா வித்தியாலயம் தனது நூறாவது அகவையில் எழுச்சி பெற்றுப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல வெற்றிகளைப் பெற்று பல சாதனைகளைப் படைத்து வரும் இந்தப் பாடசாலை இன்னும் பலநூறு ஆண்டுகளுக்கு மங்கா ஒளி பரப்பி புகழோடு விளங்க வாழ்த்துகின்றேன்.

**இ.கணேசானந்தன்**
**அதிபர்**
**யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்.**

### வாழ்த்துச் செய்தி



இன்று எமது கல்லூரி நூற்றாண்டு விழா கொண்டாடுகிறது. இதையிட்டு பழையமாணவனாகிய நான் பெருமகிழ்வடைகின்றேன்.

இங்கு பாடம் கற்றதால் நான் இன்று வைத்திய நிபுணராக கடமை புரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.இதை எண்ணி எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் எனது நன்றியை தெரிவித்து இவ் விழா சிறப்புடன் நடைபெற எல்லாம் வல்ல வைரவப் பெருமானையும் ஆனைவிழுந்தானையும் வேண்டிக் கொள்கின்றேன்.

**வைத்திய நிபுணர் த. பேரானந்தராஜா**
**பழைய மாணவன், பொது வைத்திய நிபுணர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை**

### யாழ். ஆயரின் ஆசிச் செய்தி



யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டு நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு, ஆசிச்செய்தி வ்ழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வலி.வடக்குப் பகுதியில் கல்விப்பணி ஆற்றி வரும் பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை சிறந்து விளங்குகின்றது. இளவாலைக் கிராமத்தில் பல ஏழை மாணவர்களின் வாழ்வில் அறியாமையை அகற்றி ஒளியை கொடுப்பதற்காக சாதி, சமய, வர்க்க பேதமின்றி வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சுடர் இன்று வளர்ந்து நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கின்றது.


நான் புனித ஹென்றியரசர் கல்லூரியில் அதிபராக பணியாற்றிய காலப்பகுதியில் இருந்து இப்பாடசாலையின் வளர்ச்சியை நன்கு அறிந்து கொண்டேன். இளவாலைப் பகுதியில் வாழும் இந்து சகோதர மக்களுக்கு சமய அறிவை ஊட்டியதோடு, கத்தோலிக்க மாணவர்களையும் இன்முகத்துடன் வரவேற்று,மத பேதமின்றி இக்கிராமம் வளர்வதற்கு வித்திட்டதோடு,தமிழ்மொழியையும் தமிழர் பண்பாடு, சபை,கலாசாரம் என்பவற்றையும் வளர்ப்பதற்கு இப்பாடசாலையில் பலர் உழைத்தமையை யான் அறிந்திருந்தேன்.

இப்பாடசாலையில் ஆரம்ப கல்வியை பெற்ற பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல மனிதர்களாக சேவை புரிந்து பாடசாலையின் பெயரை பறைசாற்றி நிற்கின்றனர்.

தொடர்ந்தும் இப்பாடசாலை கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனைகளை படைத்து பாடசாலை சமூகத்திற்கும் இளவாலை கிராமத்துக்கும் பெருமை சேர்த்து கொடுக்க இக்கல்விக் கூடம் களம் அமைத்துக் கொடுக்க இறை ஆசீர் வேண்டி வாழ்த்துக் கூறி நிற்கின்றேன்.

**கிறிஸ்துவிலும் மரியன்னையிலும் பக்தியுள்ள,**
**மேதகு ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**யாழ். ஆயர்**

### அருட் தந்தை எட்வினாதனின் ஆசிச் செய்தி



இயற்கை வளம் கொஞ்சும் இளவாலை கிராமத்தில் ஏழை மாணவர்களின் அறிவுச் சுடராய் விளங்கும் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் மங்கா புகழுடன் தனது 100 ஆவது ஆண்டு நிறைவில் பூரித்து, நூற்றாண்டு விழா எழுச்சியில் மிடுக்கோடு பயணிக்கும் இவ்வேளையில், பாடசாலையின் வரலாற்று சுவடுகளையும் சாதனைகளையும் தாங்கி வெளிவரும் மலருக்கு ஆசிச்செய்தியினை வழங்குவதில் இப்பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன்.

இப்பாடசாலை கிராமப் புறத்தில் அமைந்திருந்தாலும் தனக்கென ஒரு தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் பேணிக் காத்து கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னணியில் வீறுநடைபோடுகின்ற பாடசாலையாக விளங்குகின்றது.

நூற்றாண்டு நிறைவில் இக்கல்விக்கூடம் நிறைவான ஆளணிவளம் மற்றும் பௌதீக வளங்களைப் பெற்று திகழ வேண்டுமென ஆசிக் கின்றேன்.

வருங்கால சந்ததியினரின் தேவைகளை அறிந்து, கல்வி உலகின் எதிர்பார்ப்புக்கு ஏற்ற வ்கையில் மாணவர்கள் கல்வி அறிவிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் உன்னத நிலை பெற்று, ஆளுமை பண்புமிக்க மாணவ சமூகத்தை தொடர்ந்தும் உருவாக்கும் நோக்கில் எமது பாடசாலை பயணிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் இளமைத் துடிப்புடன் மெய்காணும் கல்விச்சுடர் பரப்பி நற்பிரஜைகளை உற்பவிக்கும் உன்னத சேவையில் வருங்கால சந்ததியை வடிவமைக்க வாழ்த்தி இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

**அருட்தந்தை எ. எட்வினாதன்,**
**பழைய மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-5533)

வாழ்த்துவோர்-

## நூற்றாண்டு விழாக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது போதையில் தகராறு மனைவி, மகளை வெட்டிய தந்தை

## வெற்றிலைக்கேணியில் சம்பவம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி ஜே/432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடும்பத் தகராறு காரணமாக கணவனால் கத்தியினால் வெட்டப்பட்ட நிலையில் மனைவி மற்றும் மகள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நாகர்கோயில் வடக்கு பகுதியில் வசித்து வந்த இக் குடும்பத்தில் தொடர்ச்சியான குடும்பத்தகராறு காரணமாக சில மாதங்களுக்கு முன்பு வெற் றிலைக்கேணி கிராமத்திற்கு தாய் மற்றும் பிள்ளைகளை உறவினர்கள் அழைத்து வந்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்னரும் நாகர்கோயிலிலுள்ள இவர்களின் சொந்த வீட்டில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக தலையில் பலமாக கணவனால் தாக்கப்பட்ட நிலையில் தாய் மந்திகை மருத்துவமனையில் பல நாட்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இதன் தொடர்ச்சியாக தாயும் பிள்ளைகளும் வெற்றிலைக்கேணியில் தற்போது வசிக்கும் வீட்டில் இருந்த போது மது போதையில் வந்த கணவன் தாய் மற்றும் பிள்ளைகளுடன் கடுமையான வாக்குவாதத்திலும் அடிதடியிலும் ஈடுபட்டுள்ளார்.

தொடர்ந்து மனைவியை கத்தியால் கழுத்துப் பகுதியிலும் காதுப்பக்கமாகவும் பலமாக வெட்டி விட்டு மகளின் சட்டையினையும் கிழித்ததுடன் கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பித்து ஓடியுள்ளார்.

அங்கு ஏற்பட்ட கூக்குரலையடுத்து அங்கு திரண்ட பொது மக்கள் அவசர நோயாளர் காவு வண்டிக்கு தகவலைத் தெரியப்படுத்தி தாய் மற்றும் மகளை அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன் தகராறில் ஈடுபட்ட நபரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (4-6-64)

# வல்வை வீதியில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்கள் விசமிகளால் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி வல்வை பகுதிகளில் பொருத்தப்பட்டிருந்த வீதி மின் விளக்குகள் இனம்தெரியாத கும்பலினால் அவற்றின் கம்பங்களுடன் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வல்வைப் பகுதிகளில் இரவு நேரங்களில் வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரித்துக்காணப்பட்டு வந்ததுடன், அப்பகுதி இரவு நேரங்களில் இருள் சூழ்ந்து காணப்படுவதனால் விபத்துக்களும் இடம்பெற்று வந்தன.

அதனால் அந்த வீதியை இரவு வேளைகளில் பயன்படுத்துவோர் அச்சத்துடனேயே பயணித்தனர். இந்நிலையில் கரவெட்டி பிரதேச சபையினால் தலா ஒரு இலட்ச ரூபாய் பெறுதியான சூரிய சக்தியில் இயங்க கூடிய (சோலர் லைட்) மின் குமிழ்கள் பொருத்தப்பட்டன.

மின் விளக்குகள் பொருத்தப்பட்டமையினால், அப்பகுதியில் இரவு வேளைகளில் மின் குமிழ்கள் ஒளிர்ந்தமையால் விபத்துக்கள், வழிப்பறிக்கொள்ளைகள் குறைவடைந்த நிலையில் அந்த வீதி ஊடாகப் பயணிப்போர் அச்சமின்றி பயணித்தனர்.

தற்போது அப்பகுதியில் இருந்த மூன்று மின் விளக்குகளை இனம்தெரியாத கும்பல், அதன் கம்பங்களுடன் அடியோடு வெட்டி களவாடிச் சென்றுள்ளனர்.

மின் கம்பங்கள் களவாடப்பட்டமை தொடர்பில் கரவெட்டி பிரதேச சபையினால், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-33-104)



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தினால் பால் நிலை வன்முறைக்கு எதிராக நெல்லியடி நகரப் பகுதியில் விழிப்புணர்வுப் பேரணி நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# ஜனநாயக போராளிகள் கட்சியின் தேசிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேசிய மாநாடு இன்று 17 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் இடம்பெறவுள்ளது. (4)

# வினாவிடை, பேச்சுப் போட்டி; பரிசில் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டும் குருபூசையையொட்டியும் வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம் நடத்திய வினாவிடைப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவற்றின் பரிசளிப்பு விழா நாளை 18 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் சைவ சமய அபிவிருத்திக் கழக தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மருத்துவ கலாநிதி பரமேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளார்.

பேச்சுப் போட்டியில் தரம் 1 இல் 1 ஆம் இடம்: பு.பிரசன்யா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), 2 ஆம் இடம்: ர.துகினா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), 3 ஆம் இடம்: வி.மென்கா (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை).

தரம் 2 இல் 1 ஆம் இடம்: சி.பருதியா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), 2 ஆம் இடம் இருவர் சு.சானுகா (அள வெட்டி அருணோதயக் கல்லூரி), மு.அக்ஷன் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை).

வினாவிடைப் போட்டியில் க.திரன்மிகா, க.கவிஷ்மிகா (வேம்படி மகளிர் கல்லூரி), ச.அக்ஷயன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), க.சதுஸ்ரிகா (உடுவில் மகளிர் கல்லூரி), தி.அஷ்விகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஆ.ஆதிரை, சா.கிஷோத், அ.விசாகன், அ.ஆதித்தன் (யாழ். இந்துக் கல்லூரி), த.துதீபன் (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை), ச.மதீசன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), சு.கிருஷ்னி (பம்பலப்பிட்டி மெதடிஸ் வித்தியாலயம்), ந.மகிந்தன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியோர் பரிசில் பெறவுள்ளனர். (4)

# வீதியில் சென்ற பெண்ணின் தொலைபேசி அபகரிப்பு

(கரணவாய்)

வதிரி உடுப்பிட்டிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரி யாத இரு இளைஞர்கள் வீதி யில் சென்ற பெண்ணைத் தாக்கி விட்டு அப்பெண்ணிடம் காணப்பட்ட தொலைபேசியை பறித்துச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-6-60)

VISION CARE
OPTICAL SERVICES

விஷன் கெயர் நிறுவனத்தினால்
ஒழுங்கமைக்கப்பட்டுள்ள



இலவச சுகாதார
பரிசோதனை முகாம்

டிசம்பர் 18 ஆம் திகதி
108, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
மு.ப 9.00 மணி முதல் நடைபெறும்

- அடிப்படை கண் மற்றும் காது பரிசோதனை
- குருதியின் சர்க்கரை பரிசோதனை - Glucometer (RBS)
- குருதியமுக்க பரிசோதனை
- உடல் உயர பரும அளவீடு - BMI
- மருத்துவ ஆலோசனைகள்
- மூக்குக்கண்ணாடிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

தொடர்புகளுக்கு
077 478 2956 / 021 222 1808
இல. 108, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
(C-5530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளும்.

– எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கப்பல் போக்குவரத்து சேவையையும் விரைவாக ஆரம்பியுங்கள்

யாழ்ப்பாணத்தில் (பலாலி) இருந்து தமிழகத்துக்கான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

பலாலி சர்வதேச விமரன நிலையத்திலிருந்து சென்னைக்கும் சென்னையில் இருந்து பலாலிக்கும் விமான சேவை இடம்பெறுவதன் மூலம் வடபகுதி மக்கள் மிகுந்த நன்மையடைவர் என்பதில் ஐயமில்லை.

பொதுவில் வடபகுதி மக்கள் தமிழகத்துக்குச் சென்று வருவது வழமையான நீண்ட வரலாறு.

அந்த வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், பலாலியில் இருந்து சென்னைக்கும் திருச்சிக்கும் விமான சேவை இடம்பெற்றிருந்தமை அறிதற்குரியது.

ஆம், தமிழகம் உள்ளிட்ட ஆந்திரா, கேரளா வட இந்தியா போன்ற மாநிலங்களுக்கு நம்மவர்கள் தலதரிசனத்துக்காக செல்வது வழக்கம்.

அதிலும் நம்மவர்கள் வெளிநாட்டில் வாழுகின்ற சூழ்நிலை ஏற்பட்ட பின்பு, அவர்கள் இந்தியாவுக்கு வருவதும் நம்மவர்கள் இங்கிருந்து இந்தியாவுக்குச் சென்று அவர்களைச் சந்திப்பதும் ஆலய தரிசனம் மேற்கொள்வதும் நடைமுறை விடயங்கள்.

தவிர, வெளிநாட்டில் வாழுகின்ற நம் உறவுகளின் திருமண வைபவங்கள் தமிழகத்தில் நடைபெறுவது சமகாலத்தில் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இந்தியாவுக்குச் செல்வதற்காக நம்மவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்வதும் மீண்டும் அங்கிருந்து வடபுலத்துக்கு வருவதும் மிகுந்த சிரமங்களைத் தரவல்லதுடன் அஃது நிறைந்த பணச் செலவையும் ஏற்படுத்தும்.

இந்நிலையில் பலாலி விமான நிலையத்தில் இருந்து விமானம் மூலம் தமிழகம் செல்வதென்பது மிகவும் சுலபமானதென்பதுடன் தேவையற்ற சிரமங்களும் தவிர்க்கப்படும்.

அந்தவகையில் பலாலியில் இருந்து தமிழகத்துக்கான விமான சேவை இடையறாது தொடர்வதை யாழ்ப்பாணத்தின் இந்தியத் தூதரகம் உறுதி செய்ய வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, காங்கேசன்துறையில் இருந்து புதுச்சேரி மற்றும் காரைக்காலுக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்ற தகவல் ஏலவே வெளியிடப்பட்டுள்ளது.

எனவே குறித்த கப்பல் சேவையை விரைந்து ஆரம்பிக்க யாழ்ப்பாணத்து இந்தியத் துணைத் தூதரகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காங்கேசன்துறைக்கும் தமிழகத்துக்குமான கப்பல் சேவை இடம்பெறுமாக இருந்தால், எங்கள் வடபுலத்தின் பொருளாதாரத்தில் புதிய பல முயற்சிகளும் முதலீடுகளும் சாத்தியமாகும்.

அத்துடன் கப்பல் போக்குவரத்து இடம்பெறும்போது வடபுலத்தின் பொருளாதார நெருக்கடி நிலை கணிசமாகக் குறைவதுடன் மூலப்பொருட்கள் மற்றும் முடிவுப் பொருட்களை கப்பலில் இருந்து விரைவாக பெற்றுக் கொள்வதும் சாத்தியமாகும்.

ஆகையால் காங்கேசன்துறையில் இருந்து தமிழகத்துக்கான கப்பல் சேவையை விரைவாக நடத்துவதற்கு இந்தியா உதவ வேண்டும்.

# இலை மடிச்சுக்கட்டி தாக்கத்தை கட்டுப்படுத்த அறிவுறுத்தல்கள்

(அராலி)

வடக்கு நெற்பயிர்களில் தற் பொழுது மிகவும் தீ விரமாக இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் அவதானிக்கப்படுவதாக வடமாகாண பதில் விவசாயப் பணிப்பாளர் அஞ்சனா தேவி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கால நிலையானது இதன் பெருக்கத்திற்கு சாதகமாகக் காணப்படுகிறது. விவசாயிகள் சரியான கட்டுப்பாடுகளை உரிய நேரத்தில் விவசாய போதனாசிரியரின் ஆலோசனையுடன் சிபார்சு செய்யப்பட்ட இராசயன நாசினிகளை பயன்படுத்தி கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

குறித்த நோயினை அடையாளம் காணுதல் எவ்வாறு எனின் இதன் குடம்பியானது நீளப்பாடாக இலைகளை மடித்து இலைகளின் உள்ளே இருந்து இழையங்களை அராவி உண்ணும். இதனால்இலைகள்வெள்ளை நிறமாகி மடிந்து உலர்ந்து காணப்படும்.

இதன் காரணமாக இலைகளின் பச்சையம் அகற்றப்பட்டு ஒளித் தொகுப்பு நடைபெறாது. பரப்பளவு குறைவடையும் இதனால் விளைச்சல் பாதிப்படையும்..

கட்டுப்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்ட அளவில் விதை நெல் பயன்படுத்தல் (2-2.5 புசல் ஏக்கர்), பரிந்துரைக்கப்பட்ட அளவில் நைதரசன் பசளை பாவனை, இரை கொளவிகள் (பறவைகள்) அமர்ந்து இக்குடம்பிகளை உண்பதற்கு வசதியாக ஆங்காங்கே தென்னை மட்டை, கங்கு மட்டை போன்றவற்றை நிலை நிறுத்தி வைத்தல்.

இராசயன கட்டுப்பாடுகளாக குளோரன்ரனிலிபுறோல் 20 வீதம் தயோமெதொக்சாம் 20 வீதம் 40கிராம் 1 ஏக்கர் (ஐதாக் கல் 4கிராம் 16 லீ. தாங்கி) நெபியு பெதனோசயிட் 200 கிராம் 320 மி.லீ வீதமும் பாவிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (4-6-104)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு ஆறு மாத கடூழிய சிறை

(யாழ்ப்பாணம்)

எட்டு கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட குற்றவாளிக்கு 9 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஆறு மாத கடூழிய சிறைத் தண்டனை விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.டியூசன் தீர்ப்பளித்தார்.

இம்மாதம் முதலாம் திகதி அன்று நாவற்குழிப் பகுதியில் எட்டு கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் சாவகச்சேரி மதுவரி நிலைய்த்தினரினால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ் வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் 9 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்த நீதவான் 6 மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

சாவகச்சேரி நீதவானின் அதிரடி நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் அண்மைய நாட்களாக போதைப் பொருள் பாவனை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (4-6-60)

## 200 கிலோ போதைப்பொருள் தென் கடலில் கடற்படையால் மீட்பு

(கொழும்பு)

தென் கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது சுமார் 200 கிலோ ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் 2 மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் நேற்று தெரிவித்துள்ளனர்.

இலங்கை கடற்படை, பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட ரோந்தின் போதே இந்த போதைப் பொருட்களைக் கைப்பற்றியதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த இரண்டு படகுகளும் தெய்வேந்திர முனைக்கு அப்பால், கடலில் பயணித்துக் கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது படகில் இருந்து கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் நம்பப்படுகிறது. (நி)

## ஹெரோயினுடன் கைதானவர் 14 நாட்கள் மறியலில்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புத்தூர் சந்தி-தட்டாங்குளம் பகுதியில் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தால் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் ரொஷான் பெரேராவின் வழிநடத்தலின் கீழான சாவகச்சேரி மதுவரிப் பரிசோதகர் ரசிகரன் தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சந்தேக நபரிடம் இருந்து 2550 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நிறுத்தப்பட்ட நிலையில் 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.(4-6-30-60)

## 26 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் கைது

(தருமபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அக்கராயன் குளத்திற்கு அண்மித்த பகுதியில் வீடு ஒன்றில் விற்பனைக்காக மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் 26 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(4-6-316)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** விளான், அரசடி சந்தி, சங்கானை, சங்கானை வைத்தியசாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி,வல்லை வீதி- சங்கானை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பெண்கள் பாதுகாப்பு தொடர்பில் ஆலோசனைகள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு "வடக்கு மாகாணத்தில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி" எனும் கருப்பொருளில் எதிர்கால கொள்கை வகுத்தலுக்கும் திட்டமிடலுக்கும் மற்றும் மாகாண அபிவிருத்தியை நிலைநாட்டுவதற்கான பெறுமதியான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் அனுபவசார் அறிவுசார் சமூகத்திடமிருந்து கோருகின்றது.

அத்துடன் அடையாளப்படு த்தப்படும் பிரச்சினைகளும் அவற்றுக்கான ஆக்கபூர்வமான நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வுகளையும் வழங்கியு தவுமாறு கேட்டுக்கொள்கிறது.

மேற்படி விடயங்கள் பற்றிய தகவல்களை மகளிர் விவகார அமைச்சு, வ.மா.இல.04, பூருடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை,கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அல்லது அமைச்சின் மின் அஞ்சல் :womendatanp@gmail.com முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் உள்ள கால்நடை பண்ணைகளை ஒழுங்குபடுத்த புதிய சட்டங்கள் விரைவில்

## மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்

(அராலி)

**வடக்கு மாகாணத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகளை ஒழுங்குபடுத்துவற்கு சில சட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் வசீகரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் சுமார் 80 வீத கால்நடைகள் திறந்த வெளிகளிலேயே வளர்க்கப்படுகின்றன. இவை உற்பத்தித் திறன் குறைந்தவையாக காணப்படுகின்றன.

குளிரால் மாடுகள் அதிகளவில் சில தினங்களுக்கு முன்னர் இறந்துள்ளன.

இதற்கு காரணம் மாடுகளில் கொழுப்புப் படை இன்மையே ஆகும்.90 வீத மாடுகளுக்கு கொழுப்புப் படை இல்லை.இந்தப் பெரும் போக காலத்தில் அவைகளுக்கு தீவனம் இல்லை. இம்முறை தான் இந்த குளிர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.இதனை நாம் கவனமாக அணுக வேண்டும்.

திறந்த வெளிகளில் மாடுகளை வளர்ப்பவர்கள் அலட்சியமாக உள்ளனர். பண்ணைகளைப் பதிவு செய்வதில்லை. மாடுகளின் இலக்கங்களை பெறுவதில்லை. உரிய காலத்தில் தடுப்பூசிகளை பெறுவதில்லை. இவ்வாறு அவர்கள் எமக்கு ஒத்துழைப்பை வழங்குவதில்லை.

ஆகவே கால்நடைகளின் இறப்புகளை தவிர்ப்பதற்கு சில நடவடிக்கைளை, சில சட்டங்களை பின்பற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனை உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.

முறையான பதிவு மூலம் பண்ணைகளை நடத்தி, அந்த கால்நடைகள் உயிரிழந்திருந்தால், அரசாங்கம் நட்டஈடு வழங்கும் பட்சத்தில் நாம் பண்ணையாளர்களுக்கு வழங்குவோம் எனத் தெரிவித்தார். (4-6-104)

# அட்டைப்பண்ணையை அகற்றக்கோரி ஆளுநர் செயலகம் முன் போராட்டம்



(அராலி)

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி இழவன்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முறையற்ற அட்டைப்பண்ணைகளை அகற்றுமாறு கோரி நேற்று வெள்ளிக்கிழமை வட மாகாண ஆளுநர் செயலகம் முன் போராட்டம் இடம் பெற்றது.

குறித்த போராட்டம் யாழ். பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி வழியாக சென்று வட மாகாண ஆளுநர் செயலகத்தை அடைந்தது.

ஆளுநரின் செயலாளரை சந்தித்த மன்னார் மாவட்ட கடற்றொழில் சங்கத்தின் தலைவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கிராஞ்சியில் முறையற்ற சட்டவிரோத கடல்அட்டை பண்ணைகளை அகற்றுமாறு கோரி மீனவ சமூகத்தினர் சுமார் 70 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் வட மாகாண ஆளுநரின் செயலாளரை சந்தித்து அவரிடம் மஜகரை வழங்கிய நிலையில் எமது பிரச்சினைகள் தொடர்பில் தெளிவாக கூறியுள்ளோம்.

ஆளுநர் கொழும்பில் இருக்கும் நிலையில் எமது கோரிக்கை தொடர்பில் ஆளுநருக்கு தெரியப்படுத்தி இரண்டு கிழமைகளில் அதற்கான பதிலை பெற்றுத் தருவதாகவும் செயலாளர் பதிலளித்தார் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-33-104)

# ஆலய உண்டியல் திருட்டு இரு சிறுவர்கள் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 10, 12 வயதுடைய இரு சிறுவர்கள் இணைந்து கோயில் வளாகத்தில் உள்ள திருப்பணி உண்டியலை திருட முற்பட்ட வேளை கோயில் நிர்வாகத்தினரால் பிடிக்கப்பட்டு தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு சிறுவர்களும் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் இரண்டு சிறுவர்களையும் அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் இரண்டு சிறுவர்களையும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு தருமபுர பொலிஸாருக்குவழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய இரண்டு சிறுவர்களும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (4-6-316)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல்-2023

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகளினை 2023 ஆம் ஆண்டின் (01.01.2023 - 31.12.2023) வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் திகதி : 2022.12.23 (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலக முன்றல், புத்தூர்

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (VAT,NBT நீங்கலாக) | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் | | | | |
| 01 | அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 1,002,252.40 | 1200.00 |
| 02 | அக்கரை கடற்கரை – வாகன தரிப்பிடமும் சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் மகிழ்விடம் | 500.00 | 2000.00 | 58,311.00 | 500.00 |
| 03 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 268,042.50 | |
| 04 | வளலாய் கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 246,402.50 | 250.00 |
| | புத்தூர் உப அலுவலகம் | | | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 329,175.00 | |
| 02 | நிலாவரை திறந்த வெளிச்சந்தையும் வாகன தரிப்பிடமும் | 500.00 | 2000.00 | 548,311.50 | |
| | உரும்பிராய் உப அலுவலகம் | | | | |
| 01 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 3000.00 | 584,144.50 | 2250.00 |

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 500.00 இனை செலுத்துதல் வேண்டும். **ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்படும் ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.**

ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப்பட்டியல் பிரதி அல்லது வங்கிக்கணக்குப்புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

சித்தியடையும் கேள்விதாரர் கோரிய கேள்வித்தொகையினது **1/3** பங்கு தவணைக்கட்டணத்தினை **2022.12.26 ஆம் திகதி மதியம் 02.00 மணிக்கு** முன்பாக சபையின் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

(c-5532) **2022.12.17**





| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 240 | 260 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 280 | 300 |
| தக்காளி | 200 | 200 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 160 | 200 | 200 |
| கோவா | 160 | 200 | 200 | 200 |
| கரட் | 250 | 360 | 400 | 500 |
| பூசணி | 80 | 120 | 120 | 150 |
| புடோல் | 200 | 220 | 150 | 240 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 650 | 600 | 650 | 700 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 180 | 200 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 500 | 550 | 400 | 400 |
| லீக்ஸ் | 420 | 300 | 450 | 500 |
| பீற்றூட் | 400 | 350 | 320 | 400 |
| கறிமிளகாய் | 700 | 800 | 650 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 700 | — | 1000 |
| போஞ்சி | 400 | 360 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | — | 220 |
| கீரை - 1 பிடி | 180 | 140 | 180 | 200 |
| தேசிக்காய் | 150 | 200 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 300 | 350 | 300 | 320 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 180 | 220 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 50 | 50 | 40 |
| ஈரப்பலா | — | 160 | 120 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம் செய்வ...

அமெரிக்க டொலர்களுக்கு பதிலாக இந்திய ரூபாயை பயன்படுத்த முடியும்.

இந்திய ரிசர்வ் வங்கி கடந்த ஜூலை மாதம் இந்த முறையை அறிமுகப் படுத்தியிருந்த நிலையில், ரஷ்யா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளும் இதே அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. (ம-7)

## மன்னாரில்...

கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உமநகரி கிராமத்தில் தனிமையில் வசித்து வந்த வயோதிபத் தம்பதியினரின் வீட்டினுள் கூரை ஓடுகளை உடைத்து திருடர்கள் நுழைந்துள்ளனர்.

மூன்று கொள்ளையர்கள் வீட்டினுள் நுழைந்த நிலையில் ஆயுதங்களால் தம்பதியினர் இருவரை சரமாரியாக தாக்கி பணம் மற்றும் தாலிக் கொடி உட்பட 30 பவுணுக்கு மேற்பட்ட நகைகளை களவாடிச் சென்றுள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான வயோதிபப் பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## ஈழத்துச் சிதம்...

நிர்வாகத்தினரால் பலதரப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டபோதும் திருவிழா உபயகாரர்களினால் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதன் அடிப்படையில் பாலஸ்தாபனம் செய்ய இடைக்கால தடை உத்தரவினை ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கி இருந்தது.

திருவெம்பாவை உற்சவம் நடைபெறும் என்ற அடிப்படையில் ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் திருவெம்பாவை உற்சவத்தினை கொரோனா காலத்தில் நடத்தியதுபோல காலை 5 தொடக்கம் 7 மணிக்குள் திருவிழாவை நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சி எடுத்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் திருவெம்பா உற்சவத்தினை வழமை போல் சிறப்பாக முன்னெடுப்பதற்கு ஆலய நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக்கோரியும் காரைநகர் மக்களால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை காரைநகரில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7)

## 81 மாணவர்கள்...

பாவனையை இல்லாதொழிக்க பொலிஸாருடன் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ம-7)

## வயிற்றோட்டத்...

மாத ஆண் குழந்தையே உயிரிழந்தது தாகும்.

கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரு தினங்களாக குழந்தைக்கு ஏற்பட்ட வயிற்றோட்டம் காரணமாக மூச்சுவிட கஷ்டப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

அங்கு சிகிச்சை பலனின்றி குழந்தை நேற்று வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் வயிற்றோட்டத்தால் கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,60)

## தமிழர்களின்...

இருந்து உங்களுக்கு எவ்வாறான ஆதரவு கிடைக்கிறது?

எதிர்காலத்திலும் இதேபோன்ற ஆதரவை அனுபவிப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா என வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஸ் குணவர்தன, இலங்கையும் இந்தியாவும் உலகின் மிகப் பழமையான ஜனநாயக நாடுகளாக உள்ளன.

அங்கு மக்கள் அரசாங்கங்களைத் தேர்ந்தெடுப்பதுடன், பதவி நீக்கவும் செய்துள்ளனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான உறவு அடிப்படையே

உள்ளது.

மேலும், ஒவ்வொரு அரசாங்கமும் அனைத்து குடிமக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை, பாதுகாப்பு அத்துடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி போன்றவற்றில் சாத்தியமான அனைத்து வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின்முன் அனைவரும் சமம். தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் எவரும் சவால் விடலாம்.

ஆகவே, கடந்த சில மாதங்களில் நிலவிய ஜனநாயக அமைதியின்மைக்கு பதிலளிப்பதில் இப்போது அதிக நம்பிக்கை உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் யாராக இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மக்கள் மத்தியில் எங்கள் நம்பிக்கையை முழுமையாக மீட்டெடுத்துள்ளோம்.

அரசாங்கத்தின் மீது அளப்பரிய நம்பிக்கை உள்ளதுடன், நாட்டின் வடகிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளுடனும் எதிர்க்கட்சிக்குள் இருக்கும் அரசியல் குழுக்களுடனும் நாங்கள் இணைந்து செயற்படுகின்றோம். எவருக்கும் பாரபட்சம் கிடையாது.

வடக்கு மக்களோ அல்லது தமிழ் பேசும் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ என அனைவரும் முன்வைத்த வேறு சில பிரச்சினைகள் தீர்க்கப் பட்டு, தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-7)

## பிரிக்...

விக்கிரமசிங்கவின் சர்வதேச கால நிலை ஆலோசகரும் நோர்வேயின் முன்னாள் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனை நேற்று சந்தித்தார். பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் நுகேகொடையிலுள்ள இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதனையடுத்து கருத்துக் கூறிய எரிக் சொல்ஹெய்ம், பொருளாதார நெருக்கடிக்கு பசுமையான தீர்வுகளை கண்டறிவதற்காகவும் முத

லீடுகள், காற்றாலை மின்சாரம், சூரிய சக்தி மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் உதவுவதற்காகவும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தான் இலங்கை வந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுடன் மலையக மக்களும் ஒரே நாட்டிற்குள், பிரிய முடியாத இலங்கைக்குள் வாழும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்படி எரிக் சொல்ஹெய்மிடம் கோரிக்கை விடுத்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

2000ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட சமாதான பேச்சுவார்த்தையின்போது, விசேட தூதுவராக எரிக் சொல்ஹெய்ம் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 75வது ஆண்டு...

எது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் பத்மநாதன் சிறப்புரை ஆற்றவுள்ளார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1426
வெற்றி இலக்கங்கள்
தனுசு 6 3 1 0 1 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1001
B 04 55 59 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 3213
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
C 02 10 28 68
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1319
வெற்றி இலக்கங்கள்
Z 09 14 26 36 80

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 280
வெற்றி இலக்கங்கள்
துலாம் 14 16 52 55 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/12/16
சீட்டிழுப்பு இலக்கம் 4971
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
X 3 4 9 4 4 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1946
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.12.16
தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,546,120/-
O 13 20 23 32
ரூ.500/- பரிசுகளுக்கான 8271
ரூ.100/- பரிசுகளுக்கான 163

சனிதா Shanida
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.16
சீட்டிழுப்பு இல : 4107
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 5,050,960/-
வெற்றி இலக்கங்கள்
04 35 37 71
E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 262
சீட்டிழுப்பு திகதி 2022.12.16
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
12 14 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,626,020/-

ராசி
சுப்பர் ஜக்பொட்
ரூ. 3,069,479.40
திகதி 2022-12-16
வெற்றி வாரம் 3658
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
33 35 56 58
தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 9,748,700/-

28 கப்ரக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 13 03 21 31 34
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1122
வர்ணம் ஊதா
திகதி 2022.12.16 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 286,334,849.80
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1772
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2022.12.16
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 4,630,880/-
வெற்றி இலக்கங்கள்
31 40 73 75
W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்**

**V2 TRAVELS**

(C-5535)

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 30,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777



**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீடித்து தரப்படும்

(C-5536)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்**

தரம் 10 & தரம் 11 (O/L) மாணவர்களுக்கான தனியார் & குழு வகுப்புகள். நேரடி வகுப்புகள் (யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இடம்பெறுகின்றது.) Zoom class

(13790)

**076 991 3255**


# கசிப்புடன் ஒருவர் கைது

1500 மில்லிலீட்டர் கசிப்புடன் 27 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது குறித்த சந்தேகநபர் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த வேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,104)


**நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு**

**மழை காலம் ஆரம்பித்து இருப்பதனால் நீர்க்கசிவு பிரச்சினையால் அவதியுறுகிறீர்களா? அப்படியானால் கவலைப்படாதீர்கள்...**

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த் தொட்டி, கோவில் வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள், நீச்சல் தடாகங்கள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதத்துடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

1 சதுர அடி 150/=... இருந்து

**Skyline Water Proofing**

(13796)

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743
www.skylineholders.com



**ஜேர்மனியில் தொழில் பயிற்சியுடன் வேலைவாய்ப்பு**

கவர்ச்சிகரமான யூரோ(Euro) சம்பளத்துடன் உங்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகள் ஜேர்மனியில்.
இலவச "zoom" மூலமான கருத்தரங்கில் இணையுங்கள்
17.12.2022 சனி காலை 7.30 மணி
**meeting ID : 88131110648 pass code : 681412**

Nifco

(13788)


# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்தி நிகழ்வு பிற்போடல்

எதிர்வரும் 18.12.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மதியம் 12.00 மணியளவில் ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருந்த **சுப்பிரமணியம் தேவராஜா** அவர்களின் வீட்டுக் கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசன நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

(13793)

சிவன் வீதி,
திருநெல்வேலி.
077 315 1404
077 118 7947

திரு, திருமதி மைதிலி - ஸ்ரீஸ்கந்தராஜா
திரு. தேவராஜா - வாகீசன்

# 31 - ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 18.11.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலதெய்வம்

## அமரர் பாலசிங்கம் இரவீந்திரன்

**பிறப்பு:- 06.09.1954 இறப்பு:- 18.11.2022**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (17.12.2022) சனிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (18.12.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மயிலியாவளவு,
கரணவாய், கரவெட்டி,
076 144 5534

(13779)

இங்ஙனம்
குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 185 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13798)

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 986 5457, 077 814 7389**



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 44 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

**தரகர் தேவையில்லை**

(13798)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.